# Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 570/2025 |
| Police station | : | நடுவீரப்பட்டு P.S |
| Deposition of witness for Prosecution | : | LW1 / PW1 |
| Name | : | ராஜசேகர் |
| Father Name/Husband Name | : | த/பெ. உத்திராபதி |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 23.07.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது பத்திரக்கோட்டை கிராமத்தில் வசித்து மரவாடி வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 15.07.2023 ம் தேதி 21.00 மணியளவில் நடுவீரப்பட்டு மந்தை வேதவள்ளி பழக்கடை அருகே நானும், மோகன் என்பவரும் இரு சக்கர வாகனத்தில் வரும்போது கும்பலாக சிலர் சத்தம் போட்டுக்கொண்டு இருந்தார்கள். அதை நான் வேடிக்கை பார்க்க சென்றபோது அதில் ஒரு நபர் என்னை அசிங்கமாக திட்டி கையாலும், காலாலும் அடித்து என் சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளி விட்டார்கள். கூட்டமாக இருந்ததால் யார் என்னை அடித்தார்கள் என்று நான் சரியாக பார்க்கவில்லை. எனக்கும் எதிரிக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததால் அவர் தான் என்னை அடித்திருப்பார் என்ற அனுமானத்தில் அவர் மீது புகார் அளித்துவிட்டேன். அதன் பிறகு தான் எதிரி

இச்சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று தெரிய வந்தது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **மேற்படி கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி.</u>**

கடந்த 15.07.2023ம் தேதி 21.00 மணியளவில் நடுவீரப்பட்டு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மந்தை வேதவள்ளி பழக்கடை அருகே நானும், மோகன் என்பவரும் இரு சக்கர வாகனத்தில் வரும்போது இவ்வழக்கின் எதிரி என்னை இரு சக்கர வாகனத்தில் வழி மறித்து ஏய் தேவிடியா பையா, ஒக்காலஓழி என்று அசிங்கமாக திட்டி நான் question paper leak செய்து அதில் கிடைத்த பணத்தை எடுத்துக்கொண்டு வரும்போது போலீஸ் என்னை துரத்தியதால் பணத்தை கீழே போட்டுட்டு ஓடிட்டேன். அந்த பணத்தை உன் அப்பா தான் எடுத்து வச்சிக்கொண்டு அந்த பணத்தை மரவாடி வாங்கி வச்சிக்கிட்டு பொழப்பு நடத்துறிங்களா என்று அசிங்கமாக திட்டி என் சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளி கையாலும் , காலாலும் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும் ஏன் எனது அண்ணனை அடிக்கிறீங்க என்று கேட்ட மோகன் என்பவரை பார்த்து இவ்வழக்கின் எதிரி என் பணத்தை கொடுக்கலனா உன் குடும்பத்தையே கொளுத்தி வாரி கொட்டிவிடுவேன் என்று கூறி கொலை மிரட்டல் விடுத்தார் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி அரசு தரப்பு சாட்சியில் இருந்து விலகி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.